




# ஆசார்யர்களின்
# க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 31 30.07.2025

Srirangam Srimad Andavan Ashramam



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய

## முத்துக்கள்

## உபதேசங்கள்

# முத்துக்கள்

## 1. திருமந்திரச் சுருக்கு:: திருவஷ்டாக்ஷரத்தின் தாத்பர்யம்.

மூன்று அக்ஷரங்களோடுகூடின பிரணவத்தால், ஆத்ம ஸ்வரூபமானது லஷ்மியோடு கூடின ஸர்வ ரக்ஷகனான பகவானுக்கே சேஷம், பகவானுக்கும் பாகவதர்களுக்கும் தவிர மற்றவர்களுக்குச் சேஷ மன்றென்பது ஏற்படுகிறது.

பிரணவத்திற்கு அடுத்த நம: என்பதால், நானும் என்னைச் சேர்ந்தவையாக நினைக்கும் வஸ்துக்களும் எனக்குச் சேஷமல்ல; அவைகளுக்கு நான் ஸ்வாமியும் அன்று; ஸ்வதந்திரனுமன்று என்பது ஏற்படுகிறது.

அதற்குமேலிருக்கும் நாராயணாய என்ற சப்தத்தால், சேதனா சேதனரூபமான பிரபஞ்சத்திற்கு ஆதாரமும், அவைகளை வியாபிக்கிறவனும், கதியும், அவைகளால்அடையப்படுகிறவனுமான ஸ்ரீமந்நாராயணனுடைய கைங்கர்யமே புருஷார்த்தம். இந்தப் புருஷார்த்தத்தை அடைவதற்காகவே ஆத்மஸ்வ ரூபம் இருக்கிறது என்பது ஏற்படுகிறது.

இப்படி விசேஷார்த்தத்தோடு கூடின திரு அஷ்டாக்ஷரத்தை எவன் உச்சரித்துக்கொண்டிருக்கிறானோ அவனிருக்குமிடத்தில்

யத்ராஷ்டாக்ஷரஸம்ஸிதோ மஹாபாகோ மஹீயதே |
ந தத்ர ஸம்சரிஷ்யந்தி வ்யாதிதுர்பிக்ஷ தஸ்கரா:

என்கிறபடியே வியாதி முதலானவைகள் நடையாடா. ஆகையால் அர்த்தத்துடன் இந்த மந்திரத்தை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டிருப்பது விசேஷ க்ஷேமத்தைக் கொடுக்கும்.

திருமந்திரச் சுருக்கு முற்றிற்று.

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்.

*****************************************************

# 2. ஐந்து அங்கங்களோடு கூடிய சரணாகதியின் ஸ்வரூபம்.

சரணாகதி என்பது ப்ரபத்தியென்றும், ஆத்ம நிக்ஷேபமென்றும், பரஸமர்ப்பணம் என்றும், ந்யாஸமென்னும் பலசப்தங்களால் சொல்லப்படும். என்னுடைய இந்த ஆத்மஸ்வரூபம் மோக்ஷத்தை அடைவதற்காக என்னால் செய்யப்பட்ட உபாயம், இதனால் கிடைக்கக்கூடிய பலம் இவைகள் எம்பெருமானைச் சேர்ந்தவை என்கிற நிச்சயமான நம்பிக்கையுடன் இவைகளை எம்பெருமானிடத்தில் ஸமர்ப்பிப்பது தான். இதுதான் ஆத்மயாகம் என்று சொல்லப்படும். யாகமாவது-ஒரு தேவதையை உத்தேசித்து நெய் முதலான ஏதாவது ஒரு வஸ்துவை அக்னியில் சேர்ப்பது. இந்தரனை உத்தேசித்து நெய் முதலானவற்றில் ஏதாவதொன்றை அக்னியில் சேர்த்துவிட்டு, " இந்த்ராய இதம் ந மம; என்று சொல்லவேணும். இப்படித்தான் செய்ய வேண்டும். இதின் அர்த்தமாவது, இதம் - என்னால் அக்னியில் சேர்க்கப்பட்ட நெய் முதலானது, இந்த்ராய -இந்த்ரனையும்பொருட்டே, ந மம; - என்னுடையதன்று என்பது. இவ்விடத்தில் 'இந்த்ராய' என்றும், 'ந மம;' என்றும் இந்த இரண்டும் சேர்ந்தால் தான் த்யாகம் என்று சொல்லப்படும் யாகம் ஸித்திக்கும். இதமிந்த்ராய' (இந்திரனையும் பொருட்டு) என்று சொன்னால், இந்த்ரனுக்கு இதில் ஸம்பந்தம் ஏற்படுமே தவிர கொடுத்தவனுடைய ஸம்பந்தத்தை விட்டதாக ஏற்படாது. அதற்காக 'ந மம (என்னைச்சேர்ந்ததன்று) என்றும் சொல்ல வேண்டும். ' ந மம" என்று மட்டும் சொல்வது போதாது. அப்பொழுது தனக்கு வேண்டாமென்று விடப்பட்ட உதாஸீனவஸ்துவைப் போலாகும். ஒருவருக்குக்கொடுத்ததாக ஏற்படாது. ஆகையால் இதமிந்த்ராய ந மம; என்று தன் ஸம்பந்தத்தை விட்டதாகவும் இந்த்ர தேவதைக்குக் கொடுத்ததாகவும் சொல்லவேணும். அப்போது தான் யாகமாகும்.

இப்படி ஒரு தேவதைக்கு ஒரு வஸ்துவைக் கொடுப்பது போல்தான் சரணாகதி என்று, இந்த யாக ந்யாயத்தைச் சரணாகதியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று நம் ஸ்ரீதேசிகன் அருளிச் செய்திருக்கிறார். இங்கும் நம்முடைய ஆத்மா என்னும் வஸ்து "ஸ்ரீமதே நாராயணாய ந மம (லக்ஷ்மியோடு கூடிய நாராயணனைச் சேர்ந்தது; என்னைச் சேர்ந்த தன்று) என்று அநுஸந்தித்துச் கொண்டு பரமாத்மாவான எம்பெருமானிடத்தில் ஸமர்ப்பிப்பது. இதுதான் ஆத்மநிக்ஷேபம். என்

ஆத்மஸ்வரூபம் பகவானைச் சேர்ந்ததே; என்னுடையதன்று. மோக்ஷத்திற்காகச் செய்யும் உபாயமும் பகவானைச் சேர்ந்ததே; என்னுடைய தன்று. அதனாலேற்படும் பலனும் பகவானைச் சேர்ந்ததே; என்னுடையதன்று- என்கிற இந்த மூன்று ஸமர்ப்பணத்திலும் மூன்று த்யாகமும் சேர்ந்தது. இந்த ஆறும் சேர்ந்து தான் பூர்ணமான ஆத்ம ஸமர்ப்பணமாகும். இதுதான் சரணாகதியென்றும் சொல்லப் படுகிறது. இது தான் அங்கி.(ப்ரதானம்).

இதற்கு ஐந்து அங்கங்களுண்டு.

1. ஆநுகூல்யஸங்கல்பம்-பகவானுக்குச் சரீரமாயிருக்கும் ஸர்வ ப்ராணிகளுக்கும் அநுகூலனாகவே இருப்பேன் என்று உறுதியான ஜ்ஞானம்.

2.ப்ராதிகூல்யவர்ஜனம் - ப்ரதிகூலனாயிருக்கமாட்டேன் என்று உறுதியான ஜ்ஞானம்.

3. மஹாவிச்வாஸம்-பகவான் நம்மை நிச்சயமாய்க் காப்பாற்றுவான் என்று த்ருடமான நம்பிக்கை.

4. கோப்த்ருத்வவரணம்- நீ என்னை ரக்ஷிக்கவேணும் என்று ப்ரார்த்திப்பது.

5. கார்ப்பண்யம்- எனக்குச் சரணாகதியைத் தவிர வேறு ஸாதனத்தைச் செய்யச் சக்தியில்லை என்று அநுஸந்திப்பது. இங்கு, நீ என்னை ரக்ஷிக்க வேணும் என்று ப்ரார்த்திப்பது, பக்தி செய்கிறவன் சரணாகதி செய்கிறவன் இரண்டுபேருக்கும்கும் துல்யம். சரணாகதி செய்கிறவனுக்கு உபாயத்வ ப்ரார்த்தனை என்பது அதிகம். அதாவது- நான் பக்தி செய்யச் சக்தியில்லாதவன்; நீயே அந்த பக்தி ஸ்தானத்திலிருந்து நான் செய்யும் சரணாகதியாலேயே மோக்ஷத்திற்காக நான் செய்யும் வியாபாரத்தை அங்கீகரித்துக்கொண்டு எனக்கு ஸாதனமாய் என்னை ரக்ஷிக்கவேணுமென்பது. சரணாகதிக்கு ஐந்து அங்கங்கள் தவிர, ஸாத்விகத் தியாகம் என்று ஆறாவதாக ஓர் அங்கமுமுண்டு. அது சரணாகதியின் ஆரம்பத்திலேயே செய்ய வேண்டுவதால் இது மற்ற ஐந்து அங்கங்களோடு கூடிய ப்ரபத்திக்கு அங்கம். இப்படிப்பட்ட அங்கங்களோடு கூடிய சரணா கதியைப் பகவானிடத்தில் செய்தால் பகவான் மோக்ஷ விரோதியான நம்முடைய எல்லாக்கர்மங்களையும் போக்கி, மோக்ஷரூபமான புருஷார்த்தத்தைக் கொடுத்து, நமக்கு மறுபடி ப்ரக்ருதிஸம்பந்தமான ஸம்ஸாரம் வராமல் பண்ணி, தன்திருவடிகளில் நித்திய கைங்கர்யம் பண்ணும் படி செய்து ரக்ஷிப்பன். இது சரணாகதியின் ஸ்வரூபம்.

# 3. சரமச்லோகத்தின் சுருக்கமான பொருள்

நீ உன்னால் செய்யக்கூடிய சாஸ்த்ரோக்தகர்மாக்களைச் செய்து, அதின் பலத்திலும் கர்த்ருவத்திலும் உன் ஸம்பந்தத்தை விட்டு என்னிடத்தில் அவைகளை ஸமர்ப்பித்து என்னையொருவனையே மோக்ஷத்திற்கு ஸாதநமாக நினைத்து, என் திருவடிகளைச் சரணமாக அடையக்கடவாய். ஸர்வஜ்ஞனாயும், ஸர்வசக்தனாயும், ஸர்வஸுலபனாயும் பரம காருண்யத்தால் கண்ணனாக அவதரித்துமிருக்கிற நான், அகிஞ்சனனாயும் அசக்தனாயும் என் திருவடியைச் சரணமாக அடைந்தவனுமான உன்னை மோக்ஷ விரோதிகளான ஸகல பாபங்களி னின்றும் விடுவித்து பரிபூர்ண ப்ரம்மானுபவ ரூபமான மோக்ஷத்தைக் கொடுத்து ரக்ஷிப்பேன். இனி துக்கமும் பயமும் உனக்கு வேண்டாம் என்பது.

சரம ச்லோகச் சுருக்கு முற்றிற்று.

